[2004 ஜூலை 27

33—

சிமெண்ட் தொழிற்சாலை

***42404—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி அருகில் உள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்தும் திட்டம் ஏதுமில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி அருகிலுள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் மிகவும் பழுதடைந்த machine-களைக் கொண்டு தயார் செய்யப்படுவதன் மூலம் cost of production அதிகமாக ஆகின்றது. ஒரு மூட்டைக்கு 10 ரூபாய் கூடுதலாகச் செலவாகிறது. இதற்கு புதிய machine-களைப் பொருத்தினால் 201 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் புதிய machine-கள் பொருத்துகின்ற போது ஓர் ஆண்டுக்கு 30 கோடி முதல் 40 கோடி ரூபாய் வரை இலாபம் ஈட்ட முடியும் என்று அங்கிருக்கின்ற நிபுணர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் அமைச்சரவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்கு மொத்தம் 210 கோடி ரூபாய் செலவு ஆகுமெனத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கான மூலதனத்தை, 50 கோடி ரூபாய் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்தும், 110 கோடி ரூபாய் இதர நிறுவனத்திடமிருந்தும் திரட்ட முடிவு செய்திருந்த சூழ்நிலையில், இப்போது 50 கோடி ரூபாய் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்து பெற முடியாத

2004 ஜூலை 27]

சூழ்நிலையாலும், 110 கோடி ரூபாய் நிதியைத் திரட்ட முடியாதிருக்கின்ற சூழ்நிலையின் காரணமாகவும் அதனை நவீனப்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிய சிமெண்ட் தொழிற்சாலைகளைத் தொடங்குகிற திட்டம் ஏதேனும் உள்ளதா? தனியார் புதிய சிமெண்ட் தொழிற்சாலைகளைத் தொடங்க..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்கு சம்பந்தமற்றது.

வினா எண் 34, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

34—

நிலவள வங்கி

***23163**—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலை ஒன்றியத்தில் வெள்ளி மலையில் நிலவள வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.